SELF DIRECTED WORK TEAMS

EMPOWERED WORK CULTURE

## சுய நெறி பணிக்குழு என்றால் என்ன?

(1)சுயக்கட்டுப்பாடுள்ள சுதந்திரத்தோடு பணியிடத்தில் செயல்படக்கூடிய குழுவாகும். (2)அன்றாட வேலைகளை தாமாக ஒருங்கிணைந்து, திட்டமிட்டு செயல்படுத்தி இலக்கை அடையும் குழுக்கள் (3)குறைந்த மேற்பார்வை / மேற்பார்வையில்லாமல் செயல்படும் குழுக்கள்.

## சுய நெறி பணிக்குழு அறிமுகம்



வீல்ஸ் இந்தியா (Sriperumbudur) நிறுவனத்தில் சுய நெறி பணிக்குழு அமைப்பானது, நிறுவனத்தின் Managing Director மற்றும் பல உயர் அதிகாரிகளால் 1st September, 2010 அன்று நிறுவனத்தின் அனைத்து உழியர்கள் முன்னிலையிலும் சிறப்பான முறையில் துவங்கி வைக்கப்பட்டது.

## சுய நெறி பணிக்குழு பயிற்சி முறை



நிறுவனத்தில் உள்ள அனைத்து உழியர்களுக்கும் சுயநெறி பணிக்குழு அமைப்பை பற்றிய தகவல்களை தெரிவிக்கவும், தெளிவு படுத்தவும் பயிற்சி வகுப்புகள், வீடியோக்கள் மற்றும் விளையாட்டுகள் மூலமாக பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சியின் பயன்பாட்டை அறிந்து கொள்ள சுய நெறி பணிக்குழு ஸ்லோகன், ஸ்கிட் மற்றும் போஸ்டர் போட்டிகள் நடத்தப்பட்டு உழியர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

## சுய நெறி பணிக்குழுவிற்கு அளிக்கப்பட்ட பயிற்சி வகுப்புகள்



சுய நெறி பணிக்குழு அமைப்பை பணியிடத்தில் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்த, நிறுவனத்தின் உழியர்களுக்கு மனித மதிப்பு, கு றிக்கோளை நிர்ணயித்தல், நேரத்தை நிர்வகித்தல், தொடர்பாற்றல் & குழு உணர்வு ஆகிய தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

## சுய நெறி பணிக்குழு அமைப்பு (1st Pillar - Team Formation)



உற்பத்தித் துறைக்கு நேரடியாக தொடர்புள்ள துறைகளில் உள்ள ஊழியர்களை (Grass root employees) வைத்து குழு அமைக்கப்பட்டது. 8 முதல் 12 ஊழியர்கள் இருக்குமாறு குழு அமைக்கப்பட்டது. குழுவை அமைக்கப்பட்டதன் மூலம் பணியிடத்தில் “நான்” என்ற எண்ணம் நீங்கி “நாம்” என்ற எண்ணம் உருவானது

## நட்சத்திர அமைப்பு (2nd Pillar - STAR Model)

நிறுவனம் அதன் வெற்றி இலக்கை அடைவதற்கு அடித்தளமாக விளங்கும் காரணிகளை (PQCDSM) அடிப்படையாகக் கொண்டு STAR பொறுப்புகள் உருவாக்கப்பட்டன.




ஒவ்வொரு சுய நெறி பணிக்குழுவில் இருந்தும் ஐந்து ஸ்டார்கள் (Production STAR, Quality STAR, Jishu Hozen STAR, Safety STAR & 5S STAR) முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஸ்டார் பொறுப்பை ஏற்று சிறப்பான முறையில் செயல்படுவதற்கு ஸ்டார்களுக்கு தேவையான அனைத்து பயிற்சிகளும் வழங்கப்பட்டன

## உயர்பொறுப்பேற்கும் பயணம் (3rd Pillar - Empowerment Roadmap)



மேற்பார்வையாளர்கள் PQCDSM தொடர்பாக செய்து கொண்டிருந்த தினசரி வேலைகள் கண்டறியப்பட்டு, அந்த வேலைகள் அனைத்தும் சுயநெறி பணிக்குழுவில் உள்ள ஸ்டார் மற்றும் உறுப்பினர்களின் பொறுப்புகளாக மாற்றப்பட்டு அவர்களுக்கு உயர் பொறுப்புகள் வழங்கப்பட்டன. உயர் பொறுப்பை ஏற்று சிறப்பான முறையில் செயல்படுவதற்கு தேவையான அனைத்து பயிற்சிகளும் குழுவிற்கு வழங்கப்பட்டன.

## குழுவின் விவரங்கள் (4th Pillar - Team Charter)




ஒவ்வொரு சுயநெறி பணிக்குழுவும், அவர்களின் குழுவினுடைய பெயர், சின்னம், மதிப்பு, நீண்ட கால இலக்கு மற்றும் PQCDSM அடிப்படையிலான தற்காலிக இலக்கு மற்றும் QC பிராஜக்ட் ஆகியவற்றை குழுவாக தேர்வு செய்து அவர்களே நிர்ணயித்தனர்.




குழு அறிமுக நிகழ்ச்சியின் போது, மேலே கூறப்பட்ட குழுவின் அனைத்து விவரங்களையும் குழுவானது அனைவரின் முன்னிலையிலும் (மற்ற குழுக்கள், மேற்பார்வையாளர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் நிறுவனத் தலைவர்) எடுத்துக்கூறி அறிமுகம் செய்து கொண்டனர்

SELF DIRECTED WORK TEAMS

EMPOWERED WORK CULTURE

## வேலைத்திறன் மதிப்பீடு (5th Pillar - Score Card)

குழுவின் திறனை மதிப்பீடு செய்வதற்கு ஸ்கோர்கார்டு (Score card) நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் மூலம் குழுவானது தனது தினசரி வேலைத்திறனை மதிப்பிட்டு, நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தது.

ஸ்கோர்கார்டை (Score-card) நடைமுறைப்படுத்தியதன் மூலம் குழுக்களுக்கிடையே PQCDSM நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதில் ஆரோக்கியமான போட்டி ஏற்பட்டு பல்வேறு குழுக்கள் இலக்குகளை அடைந்து சாதனை படைத்தனர்.


Snap Shot | Score Card | White Board | Reports | HOF | Gallery | Bench Leaders

Score Card >> View All Score Card >> Detail Score Card

Scorecard View

Date: 12/01/2011 Shift: II Shift SMT Name: Achievers Request for change

| Attribute | Attribute Image Score | Parameter | BS | S | AS | TScore | UOM | Data | AScore | Reasons |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Production | -0.17/ 40 | Overall Cell Efficiency | 80 | 85 | 90 | 20 | % | 76.53 | -3.47 | 1 Reason |
| | | Man hour / Wheel | 4 | 4.5 | 5 | 10 | Hrs | 4.23 | 12.7 | No Reason |
| | | Unit / Hour - 35 inch | 4 | 5 | 6 | 5 | Numbers | 3.06 | -14.4 | 4 Reasons |
| | | Unit / Hour -49inch | 3 | 4 | 5 | 5 | Numbers | 4 | 5 | No Reason |
| Quality | 35/ 15 | Scrap | 0 | 1000 | 1100 | 5 | PPM | 0 | 15 | No Reason |
| | | Rework | 0 | 10000 | 11000 | 10 | PPM | 0 | 20 | No Reason |
| Cost | 10/ 10 | Over Times | 0 | 0 | 0 | 10 | Hrs | 0 | 10 | No Reason |
| Safety | 25/ 25 | Incident | 0 | 0 | 0 | 10 | Numbers | 0 | 10 | No Reason |
| | | Accident | 0 | 0 | 0 | 5 | Numbers | 0 | 5 | No Reason |
| | | Safety Audit Pending Points | 0 | 0 | 0 | 10 | Numbers | 0 | 10 | No Reason |
| Morale | 10/ 10 | 5S Pending Points | 0 | 0 | 0 | 10 | Numbers | 0 | 10 | No Reason |

Team Remark : Total Team Score : 79.83

## தகவல் தொடர்பு முறைகள் (6th Pillar – Communication Continuum)

நிறுவனத்தில் தகவல் தொடர்பை முன்னேற்றவும், தகவல் தொடர்பின்மையால் ஏற்படும் பிரச்சனைகளை சரிசெய்யவும், சுய நெறி பணிக்குழு நான்கு விதமான தகவல் தொடர்பு முறைகளை பின்பற்றியது 1. தினசரி ஷிப்ட் மீட்டிங் (Shift Assembly Meeting), 2. குழு மீட்டிங்/ வாராந்திர மீட்டிங் (Weekly Team Meeting), 3. மாதாந்திர மீட்டிங் (Open House Meeting), 4. ரிசோர்ஸ் டீம் மீட்டிங் (Resouce Team Meeting)



## வேலைதிறன் அடிப்படையிலான முன்னேற்றப்பாதை (7th Pillar – SBPS)

ஒரு குழுவில் உள்ள அனைவருக்கும், அக்குழு பணிபுரியும் இடத்தில் உள்ள அனைத்து மெஷின்களிலும் வேலை செய்வதற்கான வாய்ப்பு சுழற்சி முறையில் வழங்கப்பட்டது. இதனால் குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் அனைத்து மெஷின்களிலும் வேலை செய்வதற்கும் மற்றவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும் தேவையான திறனை வளர்த்துக் கொண்டனர்.




SELF DIRECTED WORK TEAMS

EMPOWERED WORK CULTURE

SELF DIRECTED WORK TEAMS

EMPOWERED WORK CULTURE

## கற்றுக்கொள் - கற்றுக்கொடு - கற்றுக்கொள் (8th Pillar – Learn Teach Learn)

குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களும் பல்வேறு புதிய தகவல்களை செய்தித்தாள், தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கைகள் முலமாக சேகரித்து அதை குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்களுடனும், மற்ற குழுக்களுடனும் பகிர்ந்து கொண்டனர்.

இதனால் குழு உறுப்பினர்களிடையே புதிய விஷயங்களை கற்றுக் கொள்ளும் ஆர்வம் அதிகரித்து அவர்களது அறிவு மற்றும் திறமை மேம்படுவதற்கு இது அடித்தளமாக அமைந்தது

## சன்மானம் & வெகுமானம் (9th Pillar – Reward & Recognition)



குழுவானது அதன் தற்காலிக இலக்கை குறிப்பிட்ட காலத்திற்குள் அடைந்த போதும், புதிய இலக்குகளை அடைந்து சாதனைகள் செய்த போதும், அக்குழுவிற்கு சன்மானம் மற்றும் வெகுமானத் திட்டத்தின்படி அவர்களுக்கு சனமானமும் பாராட்டுதல்களும் வழங்கப்பட்டன். இத்திட்டத்தால் குழுவானது உற்சாகமடைந்து மேலும் பல சாதனைகள் செய்தன.








## மனித நேய செயல்பாட்டுக்குழு (10th Pillar – Human Value Action Team)

நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது (Under Progress)

## சுய நெறி பணிக்குழு மூலம் கிடைத்த பலன்கள்

- சுய நெறி பணிக்குழு ஸ்டார் மற்றும் உறுப்பினர்கள் உயர் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு சிறப்பாக செயல்பட்டனர். (Dail Work Management)
- மேற்பார்வையாளர்கள் தினசரி வேலைகளில் கவனம் செலுத்துவதை தவிர்த்து improvement வேலைகளை செய்யத் தொடங்கினர்
- Improvement in Production, Quality, Cost, Delivery, Safety, Morale
- சுய நெறி பணிக்குழு நடைமுறைபடுத்தப்பட்ட பிறகு QC Projects, Suggestion / Kaizen போன்றவை இரண்டு மடங்காக அதிகரித்தது.

**The Journey Continuous ……………………………………………………………………………**